# அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கின்றது

மத்திய அரசின் கீழ் வரும் தொழிலாளர்களும் ஒன்றாரியோ மாகாண தொழில் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களும் மணித்தியாலத்திற்கு அடிப்படைச் சம்பளமாக $15.50 ஐ பெறுகின்றனர்.

## ஒன்றாரியோ அடிப்படைச் சம்பளம் $15.50

ஒரு மணித்தியாலத்திற்கு ஆகக்குறைந்தது அடிப்படை சம்பளம் உங்களுக்களால் ஆற்றப்படும் வேலைக்கு வழங்கப்படுதல் வேண்டும்.சிலதொழிலாளர்களுக்கு, உதாரணமாக பண்ணைத்தொழிலாளர்கள்,அடிப்படை சம்பளம் தொடர்பாக விசேட விதிகள் உள்ளன. உங்களது வேலையானது அடிப்படை சம்பளத்திற்கு உட்பட்டதா? அல்லது உங்களால் ஆற்றப்படும் வேலைக்கு அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுவதில்லை என நீங்கள் கருதுவீர்களாயின் எங்களுக்கு அழையுங்கள்.

மது பரிமாறப்படும் உணவு சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இதுவரை பொது அடிப்படைச் சம்பளத்தினைவிட குறைவாகவே பெற்று வந்தனர். ஆனால் ஜனவரி 1, 2022 தொடக்கம் அவர்கள் பொது அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வர்.

| | பொது அடிப்படை சம்பளம் | 18 வயதிற்கும் குறைவா மாணவர்களுக்கானது |
|---|---|---|
| அக்டோபர் 1, 2022 | $15.50 | $14.60 |
| அக்டோபர் 1, 2023 | $15.50 + வாழ்க்கைச் செலவு சீராக்கள் படி | $14.60 + வாழ்க்கைச் செலவு சீராக்கள் படி |

## மத்திய அரசின் அடிப்படைச் சம்பளம் $15.55

மத்திய அரசின் கீழ் வரும் வேலைத்தளங்களில் மணித்தியாலத்துக்குரிய அடிப்படைச் சம்பளம் $15.55 ஆகும். ஒவ்வொரு ஏப்ரல் முதல் தேதியிலும் வாழ்க்கைச் செலவினை ஈடாக்கக்கூடிய வகையில் இது உயர்வடையும். டிசம்பர் 29, 2021க்கு முன்னர், மத்திய அரசின் அடிப்படைச் சம்பளமானது ஒவ்வொரு மாகாண மற்றும் பிரதேசத்தின் அடிப்படைச் சம்பளத்தினை ஒத்ததாக இருந்தது.

வங்கிகள்,ஒலிபரப்புக்கூட்டுத்தாபனங்கள்,தொலைத்தொடர்பு, மாகாணங்களுக்கு இடையிலான மற்றும் சர்வதேச போக்குவரத்து, மத்திய அரசின் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சில பழங்குடிகளுக்கான சேவைகளை வழங்கும் துறைகளைச் சார்ந்த ஊழியர்கள் கனடா மத்திய தொழில் சட்டத்திற்குக்கீழ் வருகின்றனர். மத்திய அரசின் கீழான இத்துறைகளில் ஏறக்குறைய ஒரு மில்லியன் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.



#223-720 Spadina Avenue
Toronto, Ontario M5S 2T9
Phone: (416) 531-0778
Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org

## உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

- உங்களது முதலாளி அடிப்படை சம்பளத்துக்குக் குறைவாக கூலி வழங்குவாராயின், நீங்கள் வேலை செய்த திகதி, மணித்தியாலங்கள் மற்றும் வழங்கப்பட்ட கூலி தொடர்பான விபரங்களை உங்களது வீட்டில் குறித்து வையுங்கள்.

- உங்களுடைய முதலாளி எல்லா தொழிலாளர்களுக்கும் அடிப்படை சம்பளத்தினைவிட குறைவாகவே செலுத்துவாராயின்? நீங்கள் சில நம்பிக்கையான ஊழியர்களிடம் கதைத்து, எங்களுடனான கூட்டமொன்றிற்கு ஏற்பாடு செய்தால், சம்பளத்தையும் வேலைத்தள சூழ்நிலைகளையும் முன்னைற்றுவது தொடர்பாக கலந்தாலோசனை செய்யலாம்.

- அடிப்படைச் சம்பளம் உயர்வடையும் போது சில முதலாளிகள் தொழிலாளர்களுக்குரிய சலுகைகள், மணித்தியாலங்கள், டிப்ஸ் போன்றவற்றை குறைப்பதுடன் அல்லது முன்னர் செலுத்தாத விடயங்களுக்கு இப்போது பணத்தை செலுத்தும்படி கூறுகின்றனர். இது சரியல்ல. இவ்வாறானவைகள் உங்களது வேலைத்தளத்தில் இடம்பெறுமாக இருந்தால், உதவிக்கு எங்களை அழையுங்கள்.

Updated October 2022



#223-720 Spadina Avenue
Toronto, Ontario M5S 2T9
Phone: (416) 531-0778
Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org